*கவனிக்க.- 2017.01.13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2003 - 2017 ජනවාරි මස 20 වැනි සිකුරාදා - 2017.01.20

*2003 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 58 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 72 |


**கவனிக்க.-** (i) இலங்கை ஒருங்கிணைந்த பட்டயச் செயலாளர்களின் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, சனவரி மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, சனவரி மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, சனவரி மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதி அமைச்சு

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 108 ஆம் பிரிவின்கீழ் (திடீர்) மரண விசாரணையாளர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்களைக் கோருதல்*

இதன்கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் வெற்றிடமாகவுள்ள (திடீர்) மரண விசாரணையாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பின்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் "செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தோகுதி, கொழும்பு 12" என்னும் முகவரிக்கு 2017.02.28 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "(திடீர்) மரண விசாரணையாளர் பதவி, ..................... மாவட்டம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3. இப்பதவி அரசாங்கத்தின் நிரந்தரப் பதவியொன்றல்ல. இப்பதவிக்கு நியமிக்கும் திகதி தொடக்கம் ஐந்து ஆண்டு காலத்துக்குச் செல்லுபடியாகின்றவாறு இப்பதவியில் நியமிக்கப்படுவதுடன், சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் நீதிவானினதும், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினதும் சிபார்சுகள் மற்றும் மருத்துவ சிபார்சுகளை ஆராய்ந்து பார்த்து சேவை நீடிப்புச் செய்யப்படலாம். இப்பதவியை வகிக்கும் உச்ச வயதெல்லை 70 வயதை விஞ்சுதலாகாது. ஆயினும் அதற்கு முன்னர் எச்சந்தர்ப்பத்திலும் (திடீர்) மரண விசாரணையாளர் ஒருவர் காரணங்களைக் காட்டி சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படலாம். நியமனங்கள் வழங்கப்படுகின்ற வெற்றிடமாகியுள்ள (திடீர்) மரண விசாரணையாளர் பிரிவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

4. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக (திடீர்) மரண விசாரணையாளர்களின் பணிகள் நியமனம் பெறுபவர்களினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

5. இப்பதவிக்காக சம்பளம் எதுவும் செலுத்தப்பட மாட்டாது. எனினும் மரண விசாரணையொன்றுக்காக 500 ரூபா கட்டணமொன்றும், மரண விசாரணையாளர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பிரயாணச் செலவுகள் மற்றும் இணைந்த படிகளும் செலுத்தப்படும்.

6. பின்வரும் தேவைகளைப் பூர்த்திசெய்துள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கலாம் :-

(i) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் ;

(ii) நியமனத்தை எதிர்பார்க்கும் பிரதேசத்தைக் கடந்த இரண்டு வருடமாக வதிவிடமாகக் கொண்டிருத்தல் ;

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று 30 வயதுக்குக் குறையாதவராகவும் 62 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(iv) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) ;

(v) நல்லொழுக்கமுடைய மற்றும் சிறந்த சுகாதார நிலைமையைக் கொண்டுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். மதுபானம் மற்றும் புகைபிடித்தல் பழக்கமற்ற ஆட்களுக்காக முன்னுரிமை வழங்கப்படும்.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளன்று அரசாங்கத்திடமிருந்து மாகாண சபை நிதியமொன்றிலிருந்து அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றின் நிதியமொன்றிலிருந்து சம்பளம் அல்லது படிகளைப் பெறுகின்ற ஆட்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள் மற்றும் பணிப்பாளர் சபைகளின் உறுப்பினர்களும், மாகாண சபை உறுப்பினர்கள் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களும் இப்பதவிக்காக விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர்களாவர்.

8. விண்ணப்பத்துடன் எந்தவொரு ஆவணமும் இணைத்து அனுப்பப்படுதலாகாது. ஆயினும், நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரரால் எல்லாத் தகைமைகளையும் உறுதிப்படுத்துவதற்குப் போதுமான அளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(iv) நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ;
(v) அண்மையில் பெறப்பட்ட நல்லொழுக்கச் சான்றிதழ்கள் இரண்டு ;
(vi) மேலதிக தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான வேறு சான்றிதழ்கள் ;
(vii) ஓய்வுபெற்ற விண்ணப்பதாரர்களின் ஓய்வுபெற்ற திகதியை உறுதிப்படுத்தும் எழுத்திலான சான்றிதழ்.

9. சகல விண்ணப்பங்களும் பின்வரும் படிவத்திற்கமைய தெளிவான எழுத்தில் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். தேவையான தகவல்கள் அனைத்தும் உள்ளடக்காமல் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

10. விண்ணப்பப்படிவங்களை நிரப்பும்போது தகைமைகள் பற்றிய உண்மையான விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும். மேலே 7 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள வகுதியைச் சேர்ந்த அல்லது இல. 6 அல்லது 8 ஆம் பந்திகளுக்காக பொய்யான தகவல்களை வழங்குகின்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் உண்மையான நிலைமை தெரியவருமிடத்து அத்தகைய விண்ணப்பதாரர்களின் நியமனங்கள் உடனேயே இரத்துச்செய்யப்படும்.

11. மேலும் திடீர் மரண விசாரணையாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர் மேலே 9 ஆம் பந்தியின் பதவியொன்றில் நியமிக்கப்பட்டிருப்பின் அவ்வாறு நியமனம்பெற்ற திகதி தொடக்கம் இந்நியமனம் இல்லாதொழிக்கப்படும்.

பத்மசிறி ஜயமான்ன,
செயலாளர்,
நீதி அமைச்சு.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
2016, திசெம்பர் 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**திடீர் மரண விசாரணையாளர் பதவி**

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | | பிரதேச செயலாளர் பிரிவு | |
| சம்பந்தப்பட்ட நீதிவான் நீதிமன்றம் | | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | |
| சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையம் | | வதியும் கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | |

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தெளிவான எழுத்தில்) :----.
(குடும்பப் பெயரின்கீழ் கோடிடுக.)
(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.

2. முகவரி :----.

3. தொலைபேசி இலக்கம் :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

5. பிறந்த திகதி :----.

6. 2017.02.28 ஆந் திகதிக்கு வயது :-
வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.

7. பால் : ஆணா/பெண்ணா என்பது :----.

8. கல்வித் தகைமைகள் :-

(1) க. பொ. த. (சா. த.) பரீட்சை :

| பாடம் | தரம் | ஆண்டு | பாடம் | தரம் | ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

(2) க. பொ. த. (உ. த.) பரீட்சை :

| பாடம் | தரம் | ஆண்டு | பாடம் | தரம் | ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

9. தொழிற் தகைமைகள் :----.

10. தற்போதைய தொழில் :----.

11. முன்னர் புரிந்த தொழில் :----.

12. (அ) அரசாங்கத்தில், அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றில்/ கூட்டுறவுச் சங்கமொன்றில் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றில் தொழில் புரிகின்றீரா ? :----.
(ஆ) அத்தகைய சேவையொன்றிலிருந்து விலகி/ ஓய்வுபெற்றிருப்பின் விலகியதற்கான/ ஓய்வுபெற்றதற்கான காரணம் :----.

13. (அ) உமக்கெதிராக எப்போதாவது தொழில்தருநரால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? :----.
(ஆ) அவ்வாறாயின், குற்றச்சாட்டின் தன்மையும் பெறுபேறுகளும் :----.

14. (அ) (i) ஏதேனுமொரு தவறுக்கு எப்போதாயினும் உமக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதா ? :----.
(ii) நீங்களும் சம்பந்தப்பட்ட பிணக்கொன்றை மத்தியஸ்தம் செய்வதற்காக எப்போதாயினும் மத்தியஸ்த சபைக்கு முறைப்பாடொன்று ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதா ? :----.
(ஆ) அவ்வாறாயின், அதன் பெறுபேறு :----.

15. (அ) தற்போது திடீர் மரண விசாரணையாளர் பதவியொன்றை வகிக்கின்றீரா ? :----.
(ஆ) அவ்வாறாயின், முதலாம் நியமனத்தைப் பெற்ற திகதி மற்றும் அமைச்சின் கோவை இலக்கம் :----.

16. இப்பதவிக்காக பிற தகைமைகள் எவையேனும் இருப்பின் அவை பற்றிய விபரம் :----.

17. நல்லொழுக்கச் சான்றிதழ்களை வழங்கும் இரு ஆட்களினதும் பெயர்கள், முகவரிகள் மற்றும் பதவிப் பெயர்கள் :-
(i) :----.
(ii) :----.

என்னால் மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையும் என உறுதிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு |
|---|---|---|---|
| அம்பாறை | அம்பாறை | அம்பாறை நகரம் | சாமபுர |
| | | | திஸ்ஸபுர |
| | | | சேனாநாயக்கபுர |
| | | | இந்திரசாரபுர |
| | | | சத்தாதிஸ்ஸபுரய |
| | | | கெமுனுபுர |
| | | | மிஹிந்துபுர |
| | | | நவகம்புர |
| | | | கரங்காவ |
| | | | ஜயவர்தனபுர |
| | கல்முனை | | கல்முனைக்குடி 1 |
| | | | கல்முனைக்குடி 2 |
| | | | கல்முனைக்குடி 3 |
| | | | கல்முனைக்குடி 4 |
| | | | கல்முனைக்குடி 5 |
| | | | கல்முனைக்குடி 6 |
| | | | கல்முனைக்குடி 7 |
| | | | கல்முனைக்குடி 8 |
| | | | கல்முனைக்குடி 9 |
| | | | கல்முனைக்குடி 10 |
| | | | கல்முனைக்குடி 11 |
| | | | கல்முனைக்குடி 12 |
| | | | கல்முனைக்குடி 13 |
| | | | கல்முனைக்குடி 14 |
| | | | கல்முனை (எம்டீ) 3 |
| | | | கல்முனை (எம்டீ) 1 |
| | அட்டாளைச்சேனை | ஆழம்குளம் | தீகவாபிய 1 |
| | | | தீகவாபிய 2 |
| | மஹஓயா | பின்தென்னபத்துவ வடக்கு | அரந்தலாவ |
| | | | பொறபொல |
| | | | சமகிபுர |
| | | | டெம்பிட்டிய |
| | | | பூலாவல |
| | | | பெதிரெக்க |
| | | | மஹஓயா |
| | | | உணுவத்துர புபுல |
| | | | தெபெல்பொல |
| | | | தம்பதெனிய |
| | | | கெக்கிரிஹேன |
| | | | போகமுயாய |
| | | | இத்தபொல |
| | | | குடாஹரஸ்கல |
| | | | லாஹுகல |
| | | | கெலவின்ன |
| | | | பொல்லபெத்த |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு |
|---|---|---|---|
| | தமன | தொட்டம | பக்மிட்டியாவ |
| | | | பன்னல்கம |
| | | | குமன |
| | | | வெஹெரகல |
| | | | தொட்டம |
| | | | 18ஏ குடியேற்றம் |
| | | | அம்பலன்ஓயா |
| | | | மடவலலந்த |
| | | | மடான |
| | | | திம்பிரிகொல்ல |
| | | தமன | அலஹேன |
| | | | தமன |
| | | | பெரணிகம |
| | | | கரலேவ |
| | | | ஹெலகம்புர |
| | | | உக்சிறிபுர |
| | | | முவங்கல |
| | | | கீனவத்த |
| | | | கல்மடுவ |
| | பதியதலாவ | பதியதலாவ | பதியதலாவ |
| | | | கிறவான |
| | | | கெஹெல்உல்ல |
| | | | ஹோலிகே |
| | | | தலாபிட்டஓயா தெற்கு |
| | | | மரங்கல |
| | | | கொலமந்தலாவ |
| | | | மிரிஸ்வத்த |
| | | | தொரகும்புர |
| | | | கோமான |
| | | சேரங்கட | பலதுருவெல்ல |
| | | | புலுன்கஸ்முல்ல |
| | | | சேரங்கட |
| | | | மோரதெனிய |
| | | | பல்லேகம |
| | | | கல்ஓடே |
| | | | உனாபான |
| | | | ஹாகம்வெல |
| | | | சரணகம |
| | | | தலாபிட்டஓயா இடது |
| அநுராதபுரம் | பதவிய | பராக்கிரமபுர | பிசோகொட்டுவ |
| | | | பதவிய |
| | | | சுதர்ஷனகம |
| | | | பிங்காய |
| | | | புத்தங்கல |
| | | | பராக்கிரமபுர |
| | | | எலிகிம்புலாகல |
| | | | மைத்திரீபுர |
| | | | அபயபுர |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு |
|---|---|---|---|
| | | | கும்புத்வெவ |
| | | | ஊரெவ |
| | | | மகசென்புர |
| | | | ருவன்புர |
| | | | போகஹவெவ |
| | | | பாலயாவெவ |
| | பலாகல | மேற்கு கிரலவ கோரளை | இபுல்வெஹெர |
| | | | மானேருவ |
| | | | வம்பட்டுவெவ |
| | | | கலுகல |
| | | | பரவஹகம |
| | | | அடியாகல |
| | | | கம்பிரிஸ்கஸ்வெவ |
| | | | தெபட்டகொல்லாகம |
| | | | புதுகேஹீன்ன |
| | | | பெல்பெதியாவ |
| | | | அல்லேவெவ |
| | | | மொரொத்தேகம |
| | | | கிறிதிவத்த |
| | | | மீவெவ |
| | | | ஹிகுருவெவ |
| | | மேற்கு உதுரவ கோரளை | அம்பகஸ்வெவ |
| | | | பலலுவெவ I |
| | | | பலலுவெவ II |
| | | | நெல்லியகம |
| | | | பகலகம |
| | | | கறவிலகம |
| | | | கம்சபாஹல்மில்ல வெவ |
| | | | கோனதெனியாகம |
| | கெபித்திகொல்லாவ | மத்திய குஞ்சுட்டு கோரளை | சிங்கள எட்டவீரவெவ |
| | | | இகல உஸ்கொல்லேவ |
| | | | குஞ்சுவட்டுவ |
| | | | ஹல்மில்லவெட்டிய |
| | | | கணுகஹவெவ |
| | | | ஈத்தலவித்தவெவ |
| | | | கலாவெவ |
| | | | டங்கார உல்பத |
| | | | குருலுகம |
| | | | தித்தகோனுவ |
| | | | தம்மென்னாவ |
| | | | ஹேரத்ஹல்மில்லேவ |
| | | | கஹட்டகொல்லேவ |
| | | | பெல்லன்கடவல |
| | | | புஞ்சிமுதாகம |
| | | | வாகல்கட டீ4 |
| | | | வாகல்கட டீ5 |
| | | | வாகல்கட டீ6 |

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *திடீர் மரண விசாரணையாளர் பிரிவு* | *கிராம அலுவலர் பிரிவு* |
|---|---|---|---|
| | ஹொரொவ்பத்தான | வடக்கு மகபொத்தான | தவலம்ஹல்மில்லேவ |
| | | | ஆனஒலொந்தேவ |
| | | | வீரசோலே |
| | | | கபுகொல்லேவ |
| | | | பகல திவுல்வெவ |
| | | | துட்டுவெவ |
| | | | வாகொல்லாகட |
| | | | வாகல்கட டீ1 |
| | | | வாகல்கட டீ2 |
| | | | மரதன்மடுவ |
| | | தெற்கு மகபொத்தான | ரத்மலே |
| | | | வெலங்கஹ உல்பத |
| | | | பரங்கியாவாடிய |
| | | | புலியன்கடவல |
| | | | தியதித்தவெவ |
| | | | நபடவெவ |
| | | | தேகெதிபொத்தான |
| | | | தெமட்டவெவ |
| | கஹட்டகஸ்திகிலிய | வடக்கு உட்டியன்குளம் | கெலே நிக்கவெவ |
| | | | நெலுகொல்லாகட |
| | | | திகன்ஹல்மில்லேவ |
| | | | மகமெஸ்ஸலாவ |
| | | | கஹட்டகஸ்திகிலிய கிழக்கு |
| | | | கஹட்டகஸ்திகிலிய மேற்கு |
| | | | கிறி இப்பேவ |
| | | | துருக்குறாகம |
| | | | மககல்கந்தேகம |
| | | | மககும்புக்வெவ |
| | | மேற்கு கல்பே கோரளை | கோணுமெறுவெவ |
| | | | பாலிப்பொத்தான |
| | | | ரத்மல்கஹவெவ |
| | | | கிறிகல்லேவ |
| | | | கிடவரன்குளம் |
| | | வடக்கு கடவத் கோரளை | பிரபோதகம |
| | | | புகுதிவுல |
| | | | பரண ஹல்மில்லேவ |
| | | | மககும்புக்கொல்லேவ |
| | | | பூனேவ |
| | | | ஆனெகட்டிய |
| | | | கடவத் ரம்பேவ |
| | | | லோலுகஸ்வெவ |
| | | | ஹீரல்லுகம |
| | | | எதாகட |
| | | | எட்டவீரகொல்லேவ |
| | | | மகதிவுல்வெவ |
| | | | இசின்பெஸ்ஸகம |
| | | | எக்கிறிகந்த |
| | | | ஹெலம்பகஸ்வெவ |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு |
|---|---|---|---|
| | | | அகுநொச்சிய |
| | | | கிறிகல்வெவ |
| | | | கிடாகலேகம |
| | | | மொரகொட |
| | | | உணகஸ்வெவ |
| | | | கரம்பன்குளம் |
| | | எப்பாவல | எப்பாவல |
| | | | கடிகாவ |
| | | | கிறிஅமுணுகொலே |
| | | | நல்லமுதாவ |
| | | | மாவத்தவெவ |
| | | | கல்மடுவ |
| | | | கெலேதிவுல்வெவ |
| | | | கெலேசியம்பலேவ |
| | | | மெதகம |
| | | | இகலகம |
| | | | கட்டியாவ யாய 6 |
| | | | கட்டியாவ யாய 9 |
| | | | கட்டியாவ யாய 10 |
| | | | கட்டியாவ யாய 1 |
| | | | கட்டியாவ யாய 2 |
| | | | எலியதிவுல்வெவ |
| | | | கதுறுகஸ்வெவ |
| | | | இகல சியம்பவேவ |
| | | | பலுகஸ்வெவ |
| | | | மெடியாவ |
| | | | எதகல |
| | | | கல்வடுவாகம |
| | | | இகல ஹல்மில்லேவ |
| | | | ரஜ்ஜல்லேகம |
| | | | அதிராணிகம |
| | | | கிரலோகம |
| | | | கெட்டகாலே |
| | | | உலக்குளம் |
| | பண்டுலகம | பண்டுலகம/ எபயாபத்துவ | பகலகம |
| | | | மகபுலங்குளம் |
| | | | மகமான்கடவல |
| | | | இலந்தகஹவெவ |
| | | | எலயாபத்துவ |
| | | | மானின்கமுவ |
| | | | மஹஎஹெட்டுவெவ |
| | | | திகனேகம |
| | | | புசியன்குளம் |
| | | | விகாரகல்லஞ்சிய |
| | | | விகாரபாலுகம |
| | | | பண்டகலம |
| | | | அபயவெவ |
| | | | மான்னக்குளம் |

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *திடீர் மரண விசாரணையாளர் பிரிவு* | *கிராம அலுவலர் பிரிவு* |
|---|---|---|---|
| | திரப்பனே | தெற்கு உலகல்ல கோரளை | பேதிஸ்ரம்பேவ |
| | | | அலகொல்லேவ |
| | | | முரியாகடவல |
| | | | இகல அப்பதலே |
| | | | கட்டமுறிச்சான் |
| | | | அலிஸ்தானய |
| | | | வன்னம்மடுவ |
| | | | செம்புகுளம் |
| | | | எத்துன்கம வடக்கு |
| | | | எத்துன்கம தெற்கு |
| | | | மீவெல்லாவ |
| | | | லபுனோறுவ |
| | | | கதுபாகம |
| | | | பகல அம்பதலே |
| | | | அமுனுச்சிய |
| | | | சதுபாகம |
| | | | ஊத்துபிட்டிய |
| | | | உட்டிமடுவ |
| | | வடக்கு உலகல்ல கோரளை | வன்னம்குளம் |
| | | | மாவத்தவெவ |
| | | | பெரியதுவம |
| | | | பயிரமடுவ |
| | | | தெமட்டவெவ |
| | | | கல்குளம |
| | | | கறுவலகஸ்வெவ |
| | | | ஞானிக்குளம் |
| | | | பெரிமியன்குளம் |
| | | | குட்டிகுளம் |
| | | | புளியங்குளம் |
| | | | திரப்பனே கடை வீதி |
| | | | திரப்பனேகம |
| | | | அலுத் புஞ்சிகுளம் |
| | | | செலெஸ்திமடுவ |
| | | 41ஏ துலான | மாவத்தவெவ |
| | | | பயிரிமடுவ |
| | | | புளியங்குளம் |
| | | | ஏ துலான |
| | | | வலவ்வேகம |
| | இபலோகம | வடக்கு கலாகம் கோரளை | பலுகஸ்வெவ |
| | | | பன்ணை |
| | | | அமுணுவெட்டிய |
| | | | விஜிதபுர |
| | | | கலாவெவ |
| | | | குசலானகம |
| | | | அமணக்கட்டுவ |
| | | | அக்கர 500 |
| | | | எலகாகம 2 |
| | | | எலகாகம 5 |
| | | | சங்கட்டேவ |

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *திடீர் மரண விசாரணையாளர் பிரிவு* | *கிராம அலுவலர் பிரிவு* |
|---|---|---|---|
| | | | இபலோகம |
| | | | மானேவ |
| | | | கந்திரியாகம |
| | | | சேனபுரகம |
| | | | நாரங்கல்லேகம |
| | | | அஸ்வெத்தும |
| | | | கல்வங்குவ |
| | | | கல்லஞ்சியாகம |
| | | | கோணபதிராவ |
| | | | கடியங்கல்ல |
| | | | வேதினிகம |
| | | | கலகெதரகம |
| | | | அலுத் வவெட்டன |
| | | | வெல்லமுதாவ |
| | | | மஹகனுமுல்ல |
| | | | இதிகஹவெவ |
| | | | பயனிடிகுளம் |
| | | | தயாகம |
| | | | வலகம்பாகுவ |
| | நொச்சியாகம | தெற்கு நிலச்சிய | ஹல்மில்ல குளம் |
| | | | துனுதம்புவெவ |
| | | | ரலபனாவ குடியேற்றம் |
| | | | பஹமுனேகம |
| | | | நாவக்குளம் |
| | | | காலதிவுல்வெவ |
| | | | துனுபொதகம |
| | | | தொம்பவலகம |
| | | | ஜயகம |
| | | | அமுனுகொலே |
| | | | நெலவகம |
| | | | பகல ஹல்மில்லேவ |
| | | | பகல கெடிநோக்குவ |
| | | | மிஹிரிபுர |
| | | | ரன்கெத்கம |
| | | | ஒத்துப்புவ |

*1-486*

---

## பொதுச்சேவைகள் ஆணைக்குழு

விவசாய அமைச்சு

**விவசாயத் திணைக்களம்**

*சட்ட அலுவலர் (நிறைவேற்று அலுவலர் வகுதியில் III ஆம் தரம்) பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்*

*விவசாயத் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்காக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**பதவிக்கு சாட்டப்படும் பணிகள்.**- *விவசாயத் திணைக்களத்தின் விடயப் பரப்பிற்குரிய பணிகளின்போது சட்ட அலுவல்கள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்குதல், திணைக்களத்துடன் தொடர்புடைய சட்டவரைவுகள், ஒழுங்குவிதிகள்*

போன்ற சட்ட ஆவணங்களைத் தயாரித்தல், சட்டமா அதிபர் திணைக்களத்துடனான பணிகள், மனித உரிமைகள் முறைப்பாடுகள் தொடர்பான அலுவல்கள், விவசாயத் திணைக்கள அலுவலர்களின் விடயப் பரப்பிற்குரிய அலுவலொன்று மீது எதிர்வாதியாகவுள்ள வழக்குகள் தொடர்பாக ஆலோசனைகளை வழங்குதலும் வழக்குகளுக்கு ஆஜராகுதலும்.

1. **ஆட்சேர்ப்பு நடைமுறை.**- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பொதுச்சேவைகள் ஆணைக்குழுவால் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். பொதுச்சேவைகள் ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட புள்ளி வழங்கல் நடைமுறை ஒன்றிற்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் வெளிப்படுத்தும் திறமைக்கேற்ப வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

2. **தகைமைகள் :**

(i) கல்வி/ தொழில்சார் தகைமைகள்.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சட்டம் தொடர்பான பட்டத்தினைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராகச் சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் ;

(ii) அனுபவம்.- உச்ச நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராகச் சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர் 3 வருடங்களுக்குக் குறையாத செயல்வலுவுடைய தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல் ;

(iii) உடல்சார் தகைமை.- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவில் உடல், உள ரீதியான ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும் ;

(iv) ஏனைய தகைமைகள் :

* இலங்கைப் பிரசையாக இருத்தல் ;
* விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;
* 2017.02.20 ஆந் திகதியன்று பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்தும் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதாகும். உங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீர் கீழ்ப்படிதல் வேண்டும் ;

(ii) இப்பதவி 3 வருட தகுதிகாண் காலத்திற்குட்பட்டதாகும் ;

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 3 வருடங்களுக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iv) 2014.01.21 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/ 2014 இன் ஒழுங்குவிதிகளுக்கும் அதனோடு நேரொத்த சுற்றுநிருபங்களின் ஒழுங்கு விதிகளுக்கும் ஏற்ப இப்பதவியைப் பொறுப்பேற்ற தினத்திலிருந்து 5 வருடங்கள் தாண்ட முன்னர் உரியவாறு அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொண்டுள்ளமை தங்களால் உறுதி செய்யப்பட வேண்டும் ;

(v) இந்நியமனமானது பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறைகள், விதி மற்றும் விவசாயத் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்கு ஏற்புடையதான ஆட்சோப்பு நடைமுறையில் ஏற்கனவே செய்யப்பட்ட திருத்தங்களுக்கும் எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கும் விதிகளுக்கும் உட்பட்டிருக்கும்.

4. **வயதெல்லை.**- (i) விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியில் 21 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் முதலாம் அட்டவணையின்படி இப்பதவிக்குரிய மாதச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 (SI-1-2016) ஆகும். உங்களுக்கு அச்சுற்றறிக்கையின் விதிகளுக்கமைய அதன் அட்டவணை II இன்படி உங்களுக்கான சம்பளம் வழங்கப்படும்.

6. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காகக் கீழ்வரும் புள்ளியிடல் நடைமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும் :**

| புள்ளி வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | உயர்ந்தபட்ச புள்ளிகள் | தெரிவுசெய்யப்பட பெற வேண்டிய புள்ளி அளவுகள் |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமை | 20 | பொருத்தமில்லை |
| 2. மேலதிக தொழில்சார் தகைமைகள் | 15 | |
| 3. மேலதிக அனுபவம் | 30 | |
| 4. ஆங்கில மொழிப்புலமை | 15 | |
| 5. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான புலமை | 15 | |
| 6. நேர்முகப் பரீட்சையின்போது வெளிப்படுத்திய திறமை | 05 | |
| மொத்தம் | 100 | |

7. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சகல வழிகளிலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளையும் உரியவாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) சாரதி அனுமதிப்பத்திரம்.

8. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய முறை :**

(i) விண்ணப்பங்கள் 2017.02.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் முகவரியில் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேற்குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிரகாரிக்கப்படும் :

விவசாயப் பணிப்பாளர் நாயகம்,
நிருவாகக் கிளை I,
விவசாயத் திணைக்களம்,
பேராதனை.

(ii) சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவங்களின் மாதிரிப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை ஏ4 அளவுடைய கடதாசியிலே முதல் பக்கத்தில் 01-10 வரையும், 2 ஆவது பக்கத்தில் 11-14 வரையும் எஞ்சியவை மூன்றாம் பக்கத்தில் அமையக்கூடியவாறு தயாரித்து தங்களது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவத்தினை வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'சட்ட அலுவலர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலை ஒன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படையின் அதிகாரம்பெற்ற அதிகாரி, பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி ஒன்றினை வகிக்கும் அதிகாரி அல்லது ரூ. 37,522 இற்கு அதிகமான மாதாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் அரச நிரந்தர பதவி ஒன்றினை வகிக்கும் அலுவலர் ஒருவர் அத்தாட்சிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(v) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபடுகின்ற அலுவலர்கள் தங்களது விண்ணப்பங்களைத் தாங்கள் பணியாற்றும் திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இதனுடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்காத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமல் போதல் அல்லது தாமதமடைந்தமை தொடர்பான எவ்வித முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. பிழையான தகவல்களை வழங்குதல்.- தங்களால் அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னர் தெரியவருமிடத்து தங்களது பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படும். அத்தகைய பொய்யான, தவறான தகவல்கள் ஆட்சேர்ப்புச் செய்த பின்னர் தெரியவருமிடத்து உரிய நடவடிக்கைகளின்கீழ் சேவையில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச சேவை ஆணைக்குழுவின் நியதிகளுக்கிணங்க,

விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

நிருவாகக் கிளை I,
விவசாயத் திணைக்களம்,
பேராதனை,
2017, சனவரி 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

விவசாய அமைச்சு

**விவசாயத் திணைக்களம்**

சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

தொடர் இல. : ☐

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. (i) முழுப்பெயர் : திரு./ திருமதி/ செல்வி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :---.

(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

(iii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----

2. நிரந்தர வதிவிட முகவரி :----.

3. தற்காலிக முகவரி :----.

4. பால் :

(ஆண்-0/ பெண்-1) ☐

(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதவும்)

5. திருமணமானவரா/ திருமணமாகாதவரா :

| திருமணமானவர் | | திருமணமாகாதவர் | |
|---|---|---|---|

(உரிய கூட்டினுள் " ✓ " குறியீட்டை இடவும்)

6. பிரசாவுரிமை :----.

7. பிரசாவுரிமை பிறப்பினாலானதா/ பதிவினூடானதா :----.

8. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

9. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலையான : | | | | | | | | | | |
| கையடக்க : | | | | | | | | | | |

10. (i) பிறந்த திகதி :

| ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(ii) விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் வயது :

| வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|

11. தகைமைகள் :

11.1 கல்வித் தகைமைகள் :

(i) பட்டம் செல்லுபடியாகும் திகதி :----.
(ii) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
(iii) பட்டம் :----.

12. தொழில்சார் தகைமைகளும் அனுபவமும் :

(i) உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகப் பெற்றுள்ள அனுபவம் :-
(ii) ..................................................................................................
(iii) ..................................................................................................
(iv) ..................................................................................................

13. நீர் ஏதேனும் குற்றவியல் செயற்பாட்டிற்காக நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளீரா ? ஆம்/ இல்லை :----.

13.1 அவ்வாறாயின் திகதி, வழக்கு இலக்கம் உட்பட முழு விபரங்களையும் தருக :----.
..................................................................................................
..................................................................................................

14. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது எனவும், சரியானது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து ஏதாவது பொய்யானது எனவும் பிழையானது எனவும் நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதனையும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அத்தகைய தவறு தெரியவருமிடத்து எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படாமல் சேவையிலிருந்து நான் நீக்கப்படுவேன் என்பதனையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................ என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும், அவர் எனது முன்னிலையில் ................. ஆந் திகதி அவருடைய கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.

16. திணைக்களத் தலைவரின் அத்தாட்சிப்படுத்தலும் சிபாரிசும் (தற்போது அரச சேவையில் பணியாற்றும் அலுவலர்களால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.)

திரு./ திருமதி/ செல்வி ........................................................................... இந்த அமைச்சில்/ திணைக்களத்தில் .. .................................................................. ஆக சேவையில் ஈடுபடுகிறார் எனவும், அவருடைய பணி மற்றும் நடத்தை திருப்திகரமானது எனவும் அவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானது எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்படுமிடத்து அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கவும் இணங்குவேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ இலச்சினையால் குறிப்பிடல் வேண்டும்.)
திகதி :----.

1-713

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக்குழு

கல்வி அமைச்சு

### நாட்டின் தேசிய பாடசாலைகளில் காணப்படும் க.பொ.த (உ.த) சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கிலமொழி ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1(அ) தரத்திற்குப் பட்டதாரிகளை ஆட்சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப்பரீட்சை - 2017

நாட்டின் தேசிய பாடசாலைகளில் காணப்படும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் க.பொ.த. (உ.த) தரங்களில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1(அ) தரத்திற்குப் பட்டதாரிகளை ஆட்சேர்த்துக் கொள்வதற்காக, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக்குழுவின் உத்தரவின்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ்வறித்தலின் இறுதியில் உள்ள மாதிரி படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் குறிப்பிடப்பட்ட தினத்துக்கோ அல்லது அதற்கு முன்னரோ "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். மேலும் பரீட்சையின் பெயரானது சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படவேண்டும்.

(அ) விண்ணப்பம் கோரப்படும் இறுதித்தினம் 2017, பெப்புருவரி 13 ஆந் திகதியாகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதம் தபாலில் தொலைந்தமை தொடர்பாக அல்லது தாமதமானது தொடர்பாக மேற்கொள்ளப்படும் முறைபாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் தினம் வரை விண்ணப்பத்தை அனுப்புவது தாமதப்படுவதால் ஏற்படக்கூடிய நட்டங்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

**2. சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை :**

2.1 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் போட்டிப் பரீட்சை நடாத்தப்படும். எழுத்துப் பரீட்சைக்குஅனைத்து விண்ணப்பதாரிகளும் தோற்றி ஒவ்வொரு வினாத்தாளுக்கும் குறைந்த பட்சம் 40 புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் முழுப்புள்ளிகளின் கூட்டுத்தொகை முன்னுரிமைக்கமைய நேர்முகப் பரீட்சை மூலம் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முறையின்கீழ், காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு நடைபெறும். இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டிராத விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சையின் போது நிராகரிக்கப்படுவர்.

2.2 இவ்வர்த்தமானி அறிவித்தலுக்குரியதாக அதிக வெற்றிடங்கள் காணப்படுவது நகரம் சார்ந்த பிரதேசங்களுக்கு வெளியே கஷ்டப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளிலாகும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்களுக்கு உரிய வெற்றிடங்கள் கொண்ட பாடசாலைப் பட்டியல் காட்சிப்படுத்தப்படும். இதற்கமைய விண்ணப்பதாரர்களினால் அச்சந்தர்ப்பத்தில் வெற்றிடம் கொண்ட பாடசாலைகளுக்காக நியமனம் பெறுவதற்கான விருப்பினை தொடரொழுங்கில் குறிப்பிட வேண்டும்.

**குறிப்பு**.- பாடசாலையை அடிப்படையாக கொண்ட முறையில் நேர்முக பரீட்சையின் போது ஒரே பாடசாலையை கோரி விண்ணப்பித்த சிலர் சமமான புள்ளியை பெற்றிருந்தால் விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிடத்திலிருந்து அப்பாடசாலைக்குரிய தூரத்துக்கு அமைவாக முன்னுரிமை கொடுக்கப்படும்.

2.3 இவ்வெற்றிடங்களுக்காக பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு சேர்த்துக் கொள்ளப்படுவதினால் ஐந்து வருடங்கள் கடக்கும்வரை எக்காரணம் கொண்டும் இடமாற்றம் வழங்கப்படமாட்டாது.

2.4 வெற்றிடமுள்ள பாடங்கள் :

| பாடம் | மொழி மூலம் | | |
|---|---|---|---|
| | சிங்கள மொழி | தமிழ் மொழி | ஆங்கில மொழி |
| வர்த்தகக் கற்கை | - | - | ✓ |
| பொருளியல் | - | - | ✓ |
| கணக்கியல் | - | - | ✓ |
| வர்த்தகப் புள்ளிவிபரவியல் | - | - | ✓ |
| விவசாய விஞ்ஞானம் | ✓ | ✓ | ✓ |
| தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் | - | - | ✓ |
| இணைந்த கணிதம் | ✓ | ✓ | ✓ |
| இரசாயன விஞ்ஞானம் | ✓ | ✓ | ✓ |
| உயிரியல் விஞ்ஞானம் | ✓ | ✓ | ✓ |
| பௌதிக விஞ்ஞானம் | ✓ | ✓ | ✓ |
| தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | ✓ | ✓ | - |
| பொறியியல் தொழில்நுட்பம் | ✓ | ✓ | - |
| உயிரியல் முறைமைத் தொழில்நுட்பம் | ✓ | ✓ | - |

3. **சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்குரிய ஓய்வூதிய கொடுப்பனவு முறை தொடர்பாக அரசாங்கத்தால் இனிவருங்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை தீர்மானத்துக்கு கட்டுப்படவேண்டும்.

(ii) இந்த பதவிக்கு நியமனம் பெறும் அலுவலர் மூன்று வருட (3) தகுதிகாண் காலத்துக்குட்படுவதோடு அந்த மூன்று வருட (3) காலத்துக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெறவேண்டும்.

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 1/2014 மற்றும் அதற்குரிய சுற்றறிக்கைக்கு அமைவாக அரசமொழி தொடர்பான தேர்ச்சியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சேவை நிபந்தனை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும் அரச நிதிப் பிரமாண சட்டதிட்டங்களுக்கும் திணைக்களம் சார்ந்த பிறிதும் கட்டளைகளுக்கும் இந்நியமனம் கட்டுப்படும்.

(v) 2014.10.23 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1885/38 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.3.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கமையவும் அச்சேவைப் பிரமாணத்துக்கு இனி மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கும் அரச சேவை நியமனங்களுக்கு உரிய பொது நிபந்தனைகளுக்கும் இந்நியமனம் கட்டுப்படும்.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- இந்நியமனத்துக்கு பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 இதற்கமைய ஜீ-ஈ-1-2016 யில் (மாதாந்தம்) ரூபா 27,740 - 300 X 6 - 380 X 7 - 445 X 2 - ரூபா 33,090 சம்பளம் உரித்தாகும். கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவது இச்சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்ட ஒழுங்குக்கு அமையவாகும். இதற்கு மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு அரசினால் காலத்திற்குக்காலம் செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் தங்களுக்கு உரித்தாகின்றது.

5. **கல்வித் தகைமை :**

5.1 இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்புக்கு அமைய அன்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் பட்டத்தைப் பெற்றிருக்க வேண்டியதுடன்,விண்ணப்பிக்கும் பாடமானது பட்டப்படிப்பில் பிரதான பாடமாகக் கற்றிருப்பது கட்டாயமானதாகும்.

**குறிப்பு**.- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞான பாடத்திற்காக விண்ணப்பிக்கும் பட்டதாரிகள் பௌதிக விஞ்ஞானப் பாடத்தைப் பட்டப்படிப்பில் பிரதான பாடமாக கற்றிருக்க வேண்டியதுடன், உயிரியல் முறைமை தொழில்நுட்பவியல் பாடத்திற்காக விண்ணப்பிக்கும் பட்டதாரிகள் விவசாய விஞ்ஞானப்

பட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும். பொறியியல் தொழிநுட்ப பாடத்துக்காக விண்ணப்பிக்கின்ற பட்டதாரிகள் தொழிநுட்பவியல், இயந்திரவியல், நிர்மாணவியல், மின்னியல் மற்றும் மின்னணுவியல் முதலிய துறைகளுக்குரிய பட்டமொன்றை பெற்றிருக்க வேண்டும். ஆங்கில மொழி மூலம் விண்ணப்பிக்கும் பட்டதாரிகள் ஆங்கில மொழி மூலப் பட்டத்தைத் கற்று பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழியைப் பட்டப்படிப்பின் பிரதான பாடமாகத் கற்றிருத்தல் வேண்டும்.

5.2 இலங்கை ஆசிரியர் சேவை நியதிக்கு அமைய கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உள்நாட்டு க.பொ.த. (சா.த) பரீட்சை மற்றும் அதற்குச் சமமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு விண்ணப்பிக்க முடியும்.

6. **வயதெல்லை**.- 13.02.2017 ஆந் திகதியன்று 18 வயதை விடக் குறையாது மற்றும் 35 வயதை விட மேற்படாது இருத்தல் வேண்டும்.

7. **பிற தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி சிறந்த நல்லொழுக்கம் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கோரும் இறுதித் தினத்துக்கு பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கான அவசிய அனைத்து தகமைகளும் பூர்த்தி செய்திருக்க வேண்டியிருப்பதோடு விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிட்ட இறுதித் தினத்துக்கு அந்தத் தகைமைகள் எல்லா வகைகளிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(iv) எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமையை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகுதிப்பாட்டினை கொண்டிருக்க வேண்டும்.

8. **விண்ணப்பிக்கும் முறை** :

8.1 விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் ஏ4 அளவு கடதாசியின் இரு பக்கத்தையும் பயன்படுத்தித் தயாரித்து பரீட்சார்த்தியினால் பூரணப்படுத்தப்பட வேண்டும். 1.0 தொடக்கம் 3.5 வரையான தலைப்பு முதலாவது பக்கத்திலும், 4.0 தொடக்கம் 7.0 வரை இரண்டாவது பக்கத்திலும் உட்படக்கூடியவாறு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும், சரியாகப் பூர்த்தி செய்யப்படாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் முன் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது தொடர்பில் விண்ணப்பதாரியினால் கண்டறிய வேண்டும். அவ்வாறில்லாத பட்சத்தில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படக்கூடும்.

8.2 விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழி மூலம் எக்காரணம் கொண்டு மாற்றிமைக்கப்பட மாட்டாது என்பதுடன் அது தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் குறித்து கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

8.3 ஒரு பரீட்சாத்திக்கு ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

8.4 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் ஒப்பம் அரச கல்லூரிகளின் அதிபர், சமாதான நீதிவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படை அதிகாரத் தரத்திலுள்ள உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமாணி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 2,40,360 க்கு மேற்பட்ட அடிப்படை வருடாந்தச் சம்பளத்தைப் பெறும் அரசின் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

8.5 சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2017.02.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்

"நாட்டின் தேசிய பாடசாலைகளில் காணப்படும் க.பொ.த (உ.த) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காகப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1(அ) தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளும் போட்டிப் பரீட்சை - 2017" எனக் கட்டாயமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

8.6 மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கு ஒவ்வாத மற்றும் பூரணப்படுத்தப்படாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிலிடும்போது விண்ணப்பப்படிவம் காணாமல்போதல் அல்லது தாமதித்துக் கிடைப்பது தொடர்பான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8.7 விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவுறுத்தல் பிரசுரமாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னர் அனுமதிப் பத்திரம் கிடைக்காது இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் நிதி செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியையும், பதிவுத் தபாலிலிட்ட பற்றுச்சீட்டையும், கொழும்புக்கு வெளிப் பிரதேசமாயின் அனுமதிப் பத்திரத்தை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தை 011-2784232 என்ற இலக்கத்திற்கு பெக்ஸ் செய்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிப்பது மிகவும் பயன்மிக்கதாகும்.

9. **பரீட்சைக்கு தோற்றுதல் :**

9.1. விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றுள்ள சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை நிலையத்தின் மண்டபப் பொறுப்பாளருக்கு தமது ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பித்து பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

9.2. பரீட்சாத்தி தமக்கு உத்தரவிடப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சகல பரீட்சாத்திகளும் உரிய பரீட்சைகளுக்குரியதான அனுமதிப் பத்திரங்களில் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தி முதலில் அம்மண்டபத்தில் உள்ள மண்டபப் பொறுப்பாளருக்குக் கையளிக்க வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் பின்பற்ற வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர் உட்பட வேண்டியேற்படும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திக்குப் பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டார் எனக் கருதப்படலாகாது.

10. **பரீட்சார்த்தியின் அடையாளங்கள்.**- தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக் கூடியவாறு பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காகக் கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை.
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. **உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை.**- பரீட்சார்த்தி தகைமை அற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்துக்குள் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்தை இரத்துச் செய்ய இடமுண்டு. பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயம் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில் அல்லது ஏதேனும் ஒரு விடயத்தை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவரை அரச சேவையிலிருந்து நீக்க இடமுண்டு.

12. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி.**- இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படும். பரீட்சை வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். சித்தியடைவதற்காக ஒரு வினாத்தாளில் குறைந்தபட்சம் 40 புள்ளிகளைக் கட்டாயமாகப் பெற வேண்டும்.

13. **பாட விதானம்.**- இப்பரீட்சையின் வினாத்தாள்கள் இரண்டாகும். சகல விண்ணப்பதாரிகளும் இவ் வினாத்தாள்களுக்காக கட்டாயம் தோற்ற வேண்டும் :

(1) **நுண்ணறிவுப் பரீட்சை - நேரம் : 1 மணித்தியாலம் (100 புள்ளிகள்).**- பரீட்சார்த்தியிடம் ஆசிரியர் தொழிலுக்கான தகைமைகள் மற்றும் தர்க்க ரீதியிலான அறிவு, தீர்மானம் எடுப்பதற்கான இயலுமைகளை அளவீடு செய்யும் நோக்கில் இவ்வினாத்தாள் தயாரிக்கப்படுகின்றது. இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக்கூடிய 50 கேள்விகளைக் கொண்டதாகும். சகல விண்ணப்பதாரர்களும் இவ் வினாப்பத்திரத்திற்கு சுருக்கமாக விடையளிக்க வேண்டும்.

(2) **பொது அறிவு - நேரம் 1 மணித்தியாலம் (100 புள்ளிகள்).**- ஆசிரியர் துறைக்குரியதாக அத்துறை தொடர்பிலான பொது அறிவு மற்றும் அல்லது உள்நாட்டு ரீதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்படும் கல்வி முன்னேற்றம் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வியினை நவீன மயப்படுத்தல் தொடர்பான பொது அறிவினை எதிர்பார்க்கும் பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக்கூடிய வகையிலான கேள்விகளைக் கொண்டமைந்திருக்கும். இச்சகல கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.

14. **பரீட்சைக் கட்டணம்** :

14.1 பரீட்சைக் கட்டணம் 600 ரூபாவை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் வைப்பிலிடக் கூடியவாறு நாட்டின் எந்தவொரு தபால் நிலையம்/உப தபால் அலுவலகத்திற்கு நிதி செலுத்தி விண்ணப்பதாரியின் பெயருக்குப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு விண்ணப்பதாரியினால் உரிய இடத்தில் ஒட்டி அப்பற்றுச்சீட்டின் இலக்கத்தைக் குறிப்பிடவும். (பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்) பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளத் திருப்பிச் செலுத்த அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றியமைக்கப்படமாட்டாது.

14.2 எழுத்து மூலப் பரீட்சையில் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமைக்கமைய தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் செயலாளர், கல்வி அமைச்சிற்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும் அல்லது www. results.exam.gov.lk இணையத்தளம் ஊடாக பகிரங்கப்படுத்தப்படும்.

15. **விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கான ஆலோசனைகள்.**-விண்ணப்பப்படிவங்களை நிரப்பும்போது கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணை 01 மற்றும் 02 ஐ மாத்திரம் பயன்படுத்தவும்.

**அட்டவணை 01**

| மொழி மூலம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| சிங்கள மொழி | 1 |
| தமிழ் மொழி | 2 |
| ஆங்கில மொழி | 3 |

**அட்டவணை 02**

| பாடங்கள் | பாடக் குறியீட்டு இலக்கம் |
|---|---|
| வர்த்தகக் கற்கை | 1 |
| பொருளியல் | 2 |
| கணக்கியல் | 3 |
| வர்த்தகப் புள்ளிவிபரவியல் | 4 |
| விவசாய விஞ்ஞானம் | 5 |
| தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் | 6 |
| இணைந்த கணிதம் | 7 |
| இரசாயன விஞ்ஞானம் | 8 |
| உயிரியல் விஞ்ஞானம் | 9 |
| பௌதிக விஞ்ஞானம் | 10 |
| தொழில்நுட்ப விஞ்ஞானம் | 11 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 12 |
| உயிரியல் முறைமைத் தொழில்நுட்பம் | 13 |

16. தற்போது அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 7 தலைப்பின்கீழ் தமது திணைக்களப் பொறுப்பாளர் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தைக் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

17. நேர்முகப் பரீட்சைக்காக உரிய தினத்தில் பங்கேற்காத விண்ணப்பதாரர்கள் தொடர்பில் எக்காரணம் கொண்டும் மீளக் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

18. அத்துடன், நேர்முகப் பரீட்சை தினமன்று சகல சான்றிதழ்களையும் சமர்ப்பிக்க வேண்டியதுடன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு சான்றிதழும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

19. இவ் அறிவித்தலில் உட்படாத விடயங்கள் இருப்பின் அது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் உரிமையும், ஏதேனும் வெற்றிடங்களில் ஒரு பகுதி அல்லது முழுமையாக நிரப்ப அல்லது நிரப்பாது இருப்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை அரச சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவுக்கு உரியதாகும்.

20. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழி வாசகங்களுக்கிடையே ஏதேனும் ஒப்புவமை இன்மைகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானது எனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் பணிப்பின் பேரில்,

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பெலவத்த,
பத்தரமுல்ல,
2017, சனவரி 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலகப் பயன்பாட்டுக்காக)

**கல்வி அமைச்சு**

நாட்டின் தேசிய பாடசாலைகளில் காணப்படும் க.பொ.த (உ.த) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1(அ) தரத்திற்குப் பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்ளும் போட்டிப் பரீட்சை – 2017

Competitive Examination for the Recruitment of Graduates to Grade 3 – 1 (a) of Sri Lanka Teachers' Service for the Vacancies Existing in G.C.E. (A/L) Sinhala, Tamil and English Medium Teaching in National Schools – 2017

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ☐

சிங்கள மொழி - 1
தமிழ் மொழி - 2
ஆங்கில மொழி - 3

(தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திற்காக அட்டவணை 01 ஐப் பயன்படுத்தி உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்)

| | பாடங்கள் | பாடங்களுக்குரிய குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

(அட்டவணை 2 இல் உரிய பாடங்கள் மற்றும் குறியீட்டு இலக்கங்களுக்கமைய உயர்ந்துபட்சம் 03 பாடங்களுக்காக மாத்திரம் விண்ணப்பிக்க முடிவதுடன் அவ்வாறு விண்ணப்பிக்கப்படும் பாடங்கள் தங்களினால் பட்டத்திற்குத் தொடர்ந்துள்ள பிரதான பாடமாக இருக்க வேண்டும்.)

1.

1.1 முழுப் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (உ-ம். : AMRAKOON MUDIYANSELAGE NAMAL HERATH) :----.

1.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களை பின்னரும் குறிப்பிட்டு பெயர் (உ-ம். : HERATH A.M.N.) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களம்/ தமிழ்) :----.

2. தற்போதைய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(அனுமதிப்பத்திரம் இம்முகவரிக்கு தபாலிலிடப்படும்)

3.

3.1 தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.2 திருமணமானவர்/ திருமணமாகாதவர் : (திருமணமானவர் - 1, திருமணமாகாதவர் - 2) ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

3.3 பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.4 2017.02.13 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

3.5 பால் (ஆண்/ பெண்) :

(பெண் - 1, ஆண் - 0) ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

4. கல்வித் தகைமை தொடர்பான விபரங்கள் :

| க.பொ.த. (சா.த.) பரீட்சை | | | | க.பொ.த. (உ.த.) பரீட்சை | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு :----. பரீட்சை சுட்டிலக்கம் :----. | | | | ஆண்டு :----. பரீட்சை சுட்டிலக்கம் :----. | |
| பாடங்கள் | பெறுபேறு | பாடங்கள் | பெறுபேறு | பாடங்கள் | பெறுபேறு |
| 1. | | 5. | | 1. | |
| 2. | | 6. | | 2. | |
| 3. | | 7. | | 3. | |
| 4. | | 8. | | 4. | |

5. உயர் கல்வித் தகைமைகள் தொடர்பான விபரங்கள் :

5.1 பட்டம் :----.

5.2 வழங்கிய பல்கலைக்கழகம் :----.

5.3 பட்டம் செல்லுபடியாகும் திகதி :----.

5.4. பட்டம் தொடர்ந்துள்ள பிரதான பாடம்/ பாடங்கள் :----.

5.5 பட்டம் பெற்றுள்ள மொழி மூலம் :----.

6.

6.1 செலுத்தப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் ரூபா (எழுத்தில்) :----.
6.2 பற்றுச்சீட்டின் இலக்கம் :----.
6.3 வழங்கிய அலுவலகம் :----.
6.4 திகதி :----.

நிதி செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை தாங்கள் வைத்துக் கொள்ளவும்.
நிதிப் பற்றுச்சீட்டைக் கழராதவாறு இங்கு ஒட்டவும்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வகையில் உண்மையானது எனத் தெரிவிக்கின்றேன். இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் என்னைச் சேவையிலிருந்து நீக்கக் கட்டுப்படுகிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்படுவதாகத் தெரிவிக்கின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவல்களையும் பின்னர் மாற்றியமைக்கமாட்டேன் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்குக் கட்டுப்படுவதாகவும் தெரிவிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்துள்ள திரு./திருமதி/செல்வி ............................................................................ .................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிந்துள்ளேன் என்றும், அவர் என் முன்னிலையில் .................................. ஆந் திகதி கையொப்பமிட்டதாகவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளதாகவும், அதன் பற்றுசீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

8. விண்ணப்பதாரி அரச ஊழியராயின் திணைக்களத் தலைவரின் உறுதியுரை :

திரு./ திருமதி/ செல்வி ..........................................................................................................................................
அவர்களின் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்றேன். அவர் அமைச்சில்/திணைக்களத்தில் நிரந்தர/தற்காலிக/ சமயாசமய ஊழியராகச் சேவையாற்றுவதாகவும் இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் குறிப்பிடுகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின்
அல்லது அதிகாரம் பெற்றவரின் கையொப்பம்.

பதவி :----.
அமைச்சு / திணைக்களம் :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)
திகதி :----.

திருத்தம்

## அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2016

*2016, திசெம்பர் மாதம் 16 ஆந் திகதிய 1998 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட "அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2016" அறிவித்தலின் 8.0 தகைமைகள் பிரிவின் பிரிவு (iii) மற்றும் பிரிவு (vi), 9.0 விண்ணப்பங்கள் பிரிவில் உப பிரிவு (இ), 10.0 பந்தியில் விண்ணப்பப்படிவத்தை திணைக்களத் தலைவருக்குச் சமர்ப்பிக்க வேண்டிய திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றியமைக்கப்படுகின்றன.*

*8.0* **தகைமைகள்** :

(iii) *கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல்* மொழி/ இலக்கியம் மற்றும் எண்கணிதம்/ தூயகணிதம்/ ஆரம்ப கணிதம்/ வர்த்தக எண்கணிதம் உள்ளடங்கலாக ஆறு (6) பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்திருத்தல் ;

(vi) *பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குக் குறித்துரைக்கப்பட்ட சகல தகைமைகளும் 2017, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதியினுள் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்.*

*9.0* **விண்ணப்பங்கள்** :

(இ) விண்ணப்பப்படிவமானது பரீட்சார்த்திகளின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தியாக்கப்பட்டு 2017.02.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில்-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,<br>ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,<br>இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,<br>த. பெ. இல. 1503,<br>கொழும்பு.

என்னும் முகவரியினை அடையக்கூடியவாறு திணைக்களத் தலைவரூடாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

10.0 2017.02.13 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குக் கிடைக்கக்கூடியவாறு தமது விண்ணப்பத்தினை நேரகாலத்துடன் தமது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

* இந்தத் திருத்தத்தினால் விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 2017, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
* அறிவித்தலில் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் பிரிவு 4.12 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதியும் திணைக்களத் தலைவரின் சான்றிதழில் பகுதி 3, 5, 7 இன் திகதியும் 2017.02.13 என திருத்தப்படுகின்றது.
* இதுவரை விண்ணப்பப்படிவத்தை அனுப்பியவர்கள் மீண்டும் விண்ணப்பப்படிவமொன்றை அனுப்பக் கூடாது.
* குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் அவ்வாறே வலுவிலிருக்கும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,<br>இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,<br>பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,<br>சுதந்திர சதுக்கம்,<br>கொழும்பு 07,<br>2017, சனவரி 13.

1-965

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.